காரணத்திற்காக தமிழ் நாட்டில் அச்சடித்து விளம்பரம் செய்தாலும் படித்துக் காட்ட பக்கத்தில் ஒருவர் போகவேண்டும். மக்களுடைய பழக்க வழக்கம், பொருளாதார வாழ்க்கை வசதிகளைப் பெருக்குகின்ற திட்டங்களின் மூலமாகத்தான், நல்ல பழக்கங்களுக்கு வசதி செய்து கொடுத்தால்தான் தீய பழக்கங்கள் குறைவதற்கு வாய்ப்பு உண்டு.

திரு. த. சோனேயா : தலேவரவர்களே, புற்று நோய் தீருவதற்கு ரேடியம் ட்ரீட்மெண்டு வசதி மதுரை ஆஸ்பத்திரியில் ஏற்படுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அது பழுதாகிவிட்டது. ஆனுல் கிராமப் புறங்களில் நாட்டு வைத்தியம் மூலமாக இந்த புற்று நோய் பலருக்குத் தீர்ந்திருக்கிறது. அரசாங்க ஆஸ்பத்திரிகளில் இந்த புற்று நோய்க்கு வைத்தியம் செய்ய நாட்டு மருந்துப் பிரிவுகளை அரசாங்கம் ஏற்படுத்துமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலேவரவர்களே, புற்று நோயில் பல வகை இருக்கிறது. நாட்டு மருந்துகளில் சில வகை நோய்கள்தான் குணமாகின்றன என்று கூறுகிருர்கள். இவை இரண்டையும் பயன்படுத்திக் கொள்கிற காலம் இனிதான் வர வேண்டும்.

சென்னேயில் மருத்துவக் கண்காட்சி.

*** 187 வினு—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னே மருத்துவக் கல்லூரியில், பிப்ரவரி மாதம் நடைபெற்ற மருத்துவக் கண்காட்சிக்கு யாரேனும் நன்கொடைகள் தந்துள்ளார்களா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) சென்னே மருத்துவக் கல்லூரியில் பிப்ரவரி மாதம் நடைபெற்ற மருத்துவக் கண்காட்சிக்கு கீழ்க்கண்டோர் நன்கொடை வழங்கியுள்ளனர் :—

1.	திரு. எம். ஜீ. ராமச்சந்திரன்	5,000.00
2.	திரு. நல்ல கிருஷ்ணன்	2,000.00
3.	ராணி வெளியீட்டார்	1,001.00

1972 ஆகஸ்ட் 19]

		ரூ.
4.	திரு. மகாலிங்கம்	1,000.00
5.	டாக்டர் சுந்தரவதனம்	1,000.00
6.	திருவாளர்கள் தாராபூர்	1,000.00
7.	திரு. ரத்தினம் (டி.வி.எஸ்)	1,001.00
8.	திரு. சுந்தர்லால் நகாதா (கிழக்கிந்திய பட நிறுவனம்)	2,500.00
	மொத்தம்	14,502.00

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, சென்னை மருத்துவக் கல்லூரியில் நடைபெற்ற இந்த கண்காட்சியைப் போல தமிழகத்திலுள்ள ஏனைய மருத்துவக் கல்லூரிகளிலும் இத்தகைய கண் காட்சியை நடத்தி மக்கள் பயன்பெற ஏற்பாடு செய்ய அரசு முன்வருமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அண்மையில் தஞ்சையில் ஒரு மருத்துவக் கண்காட்சியை நான் தொடங்கி வைத்திருக்கிறேன். அதே போல செங்கற்பட்டில் ஆளுநர் அவர்கள் திறந்து வைத்திருக்கிறார்கள். மற்ற கல்லூரிகளில் மாணவர்கள், ஆசிரியர்கள் ஒத்துழைக்கின்ற ஆர்வத்தைப் பொறுத்து, திறத்தைப் பொறுத்து அவைகளை நடத்த முடியும்.

Cases of chicken-pox in Madras City.

* 188 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether there was any outbreak of chicken-pox in Madras City around the end of March 1972 ; and

(b) if so, the preventive steps taken in this regard ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) சின்னம்மையால் பாதிக்கப்பட்டவர்களென (chicken-pox) உடல் நல அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டவர்கள் தண்டையார்பேட்டையிலுள்ள தொற்றுநோய்கள் மருத்துவமனையில் நோய் தொற்றும் தன்மை முடிகிற வரையில் தனித்து வைக்கப்பட்டனர். தங்கள் வீடுகளிலேயே தனித்து வைக்க இடம்